www.kalvinews.com



**SAMU**

*Booklet Series* **A**

*Register Number*

# 2011
# GENERAL KNOWLEDGE WITH GENERAL TAMIL

**Time Allowed : 3 Hours ]** **[ Maximum Marks : 300**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

## IMPORTANT INSTRUCTIONS

1. This Booklet has a cover ( this page ) which should not be opened till the invigilator gives signal to open it at the commencement of the examination. As soon as the signal is received you should tear the right side of the booklet cover carefully to open the booklet. Then proceed to answer the questions.
2. This Question Booklet contains **200** questions.
3. Answer **all** questions. **All** questions carry equal marks.
4. The Test Booklet is printed in *four* series *e.g.* [A] [B] [C] or [D] (See Top left side of this page). The candidate has to indicate in the space provided in the Answer Sheet the series of the booklet. For example, if the candidate gets [A] series booklet, he/she has to indicate in the side 2 of the Answer Sheet with Blue or Black ink Ball point pen as follows :

   A ■ [ B ] [ C ] [ D ]
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An Answer Sheet will be supplied to you separately by the Invigilator to mark the answers. You must write your Name, Register No. and other particulars on side 1 of the Answer Sheet provided, failing which your Answer Sheet will not be evaluated.
7. You will also encode your Register Number, Subject Code etc., with Blue or Black ink Ball point pen in the space provided on the side 2 of the Answer Sheet. If you do not encode properly or fail to encode the above information, your Answer Sheet will not be evaluated.
8. Each question comprises *four* responses (A), (B), (C) and (D). You are to select ONLY ONE correct response and mark in your Answer Sheet. In case you feel that there are more than one correct response, mark the response which you consider the best. In any case, choose ONLY ONE response for each question. Your total marks will depend on the number of correct responses marked by you in the Answer Sheet.
9. In the Answer Sheet there are **four** brackets [ A ] [ B ] [ C ] and [ D ] against each question. To answer the questions you are to mark with Ball point pen ONLY ONE bracket of your choice for each question. Select one response for each question in the Question Booklet and mark in the Answer Sheet. If you mark more than one answer for one question, the answer will be treated as wrong. *e.g.* If for any item, (B) is the correct answer, you have to mark as follows :

   [ A ] ■ [ C ] [ D ]
10. You should not remove or tear off any sheet from this Question Booklet. You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Hall during the examination. After the examination is concluded, you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
11. The sheet before the last page of the Question Booklet can be used for Rough Work.
12. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide at their discretion.
13. For Question Nos. 1 to 100 in all matters and in cases of doubt, the English Version is final.
14. Do not tick-mark or mark the answers in the Question Booklet.

www.kalvinews.com

www.kalvinews.com



1. மனிதனின் இயல்பு வெப்பநிலை

A) 37° C B) 90 K

C) 37 K D) 100° C.

Normal temperature of human body is

A) 37° C B) 90 K

C) 37 K D) 100° C.

2. ஆல்கைன்களின் பொதுவான மூலக்கூறு வாய்பாடு

A) $C_n H_{2n+2}$ B) $C_n H_{2n}$

C) $C_n H_{2n-2}$ D) $C_n H_{2n+1}$.

The general molecular formula of alkynes is

A) $C_n H_{2n+2}$ B) $C_n H_{2n}$

C) $C_n H_{2n-2}$ D) $C_n H_{2n+1}$.

3. சீரான பகடை ஒன்று உருட்டப்படுகிறது. இரட்டை எண் பகடையின் முகத்தில் தோன்ற நிகழ்தகவு

A) $\frac{1}{4}$ B) $\frac{3}{4}$

C) $\frac{1}{3}$ D) $\frac{1}{2}$.

A fair die is rolled. The probability of getting an even number on the face of the die is

A) $\frac{1}{4}$ B) $\frac{3}{4}$

C) $\frac{1}{3}$ D) $\frac{1}{2}$.

www.kalvinews.com



4. இந்தியத் தேர்தல் ஆணையம் அமைந்துள்ள இடம்

A) மும்பை B) சென்னை

C) புதுதில்லி D) கொல்கத்தா.

The Election Commission of India is situated at

A) Mumbai B) Chennai

C) New Delhi D) Kolkata.

5. அக்பரின் பாதுகாவலராக இருந்தவர்

A) பைராம்கான் B) சாந்த் பீவி

C) ஷெர்ஷா D) ராணி துர்காவதி.

The Guardian of Akbar was

A) Bairam Khan B) Chand Bibi

C) Sher Shah D) Rani Durgawati.

6. "காயசண்டிகை" உருவில் மறைந்து இருந்தவர்

A) மணிமேகலை B) ஆதிரை

C) மாதரி D) மாதவி.

Who disguished herself as "Kayasandigai" ?

A) Manimekalai B) Adhirai

C) Madhari D) Madavi.

7. பிளேவி வைரஸ் தோற்றுவிப்பது

A) யானைக்கால் வியாதி B) காலரா

C) டெங்குக்காய்ச்சல் D) மலேரியா.

www.kalvinews.com



Flavivirus causes

A) Filariasis  B) Cholera

C) Dengue fever  D) Malaria.

8. கீழே கொடுக்கப்பட்டுள்ளதில் எது சரியாக பொருத்தப்பட்டுள்ளது ?

A) மத்திய இரயில்வே மண்டலம் — மும்பை

B) கிழக்கு இரயில்வே மண்டலம் — சென்னை

C) வடக்கு இரயில்வே மண்டலம் — கோரக்பூர்

D) தெற்கு இரயில்வே மண்டலம் — மாலிகான்.

Which one of the following is correctly matched ?

A) Central Railway — Mumbai

B) Eastern Railway — Chennai

C) Northern Railway — Gorakhpur

D) Southern Railway — Maligaon.

9. ஜீனர் என்றால்

A) வென்றவர்  B) சிறந்த வீரர்

C) அறிவு பெற்றவர்  D) மத குரு.

Jina means

A) Conqueror  B) Great hero

C) Enlightened man  D) Priest.

10. ஒரு முக்கோணத்தின் அடிப்பக்கம் 9 செ.மீ. மற்றும் உயரம் 12 செ.மீ. எனில் அதன் பரப்பு

A) 108 செ.மீ.$^2$  B) 21 செ.மீ.$^2$

C) 42 செ.மீ.$^2$  D) 54 செ.மீ.$^2$.

www.kalvinews.com



The area of a triangle with base 9 cm and height 12 cm is

A) $108\ cm^2$  B) $21\ cm^2$

C) $42\ cm^2$  D) $54\ cm^2$.

11. "டெட்ராய்ட்" - எதற்கு புகழ்பெற்றது ?

A) ஆட்டோமொபைல் தொழில்  B) திரைப்படத் தொழில்

C) தகவல் தொழில்நுட்பம்  D) விவசாயத் தொழில்.

Detroit is famous for

A) Automobile industry  B) Film industry

C) Information technology  D) Agriculture.

12. வெட்டப்பட்ட டி.என்.ஏ-வின் துண்டுகளை இணைப்பதற்கு பயன்படுத்தப்படும் நொதி

A) டி.என்.ஏ. பாலிமெரேஸ்

B) ஆல்கலைன் பாஸ்படேஸ்

C) டி.என்.ஏ. லைகேஸ்கள்

D) ரெஸ்ட்ரிக்ஷன் எண்டோ நியூக்ளியேஸ்கள்.

The enzyme used to join the broken DNA fragments is

A) DNA polymerase  B) Alkaline Phosphotase

C) DNA Ligase  D) Restriction Endonuclease.

13. கோள்களின் இயக்கங்களை எதன் ஈர்ப்பு விசை கட்டுப்படுத்துகிறது ?

A) சூரியன்  B) புவி

C) நிலவு  D) நட்சத்திரங்கள்.

The movements of planets are controlled by the gravitational force of the

A) Sun  B) Earth

C) Moon  D) Stars.

www.kalvinews.com



14. உள்ளாட்சித் தேர்தல்களை இந்த அமைப்பு நடத்துகின்றது ?

A) மத்திய தேர்தல் ஆணையம் B) மாநில தேர்தல் ஆணையம்

C) மாவட்டத் தேர்தல் வாரியம் D) பார்வையாளர்கள்.

Which authority conducts the local body elections ?

A) Central Election Commission B) State Election Commission

C) District Election Board D) Observers.

15. இரண்டாம் உலகப்போரில் இந்தியர்களை ஈடுபடுத்தக் காரணமாய் இருந்த ஆங்கிலேய வைஸ்ராய்

A) சர். ஸ்டோபோர்டு கிரிப்ஸ் B) பெதிக் லாரன்ஸ்

C) லின்லித்கோ D) ஏ. வி. அலெக்சாண்டர்.

The British Viceroy responsible for involving Indians in the Second World War was

A) Sir Stafford Cripps B) Pethick Lawrence

C) Linlithgow D) A. V. Alexander.

16. இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

A) 1935 B) 1949

C) 1950 D) 1957.

Reserve Bank of India was established in the year

A) 1935 B) 1949

C) 1950 D) 1957.

17. ஒரு குதிரைத்திறன் ( H.P. ) என்பது .................. க்கு சமம்.

A) 846 வாட் B) 546 வாட்

C) 946 வாட் D) 746 வாட்.

www.kalvinews.com



One Horsepower ( H.P. ) is equal to

A) 846 watt B) 546 watt

C) 946 watt D) 746 watt.

18. ஒரு தனிமத்தின் நிறை எண் 16 அதன் அணு எண் 8, எனில் அதில் உள்ள நியூட்ரான்களின் எண்ணிக்கை

A) 16 B) 8

C) 32 D) 4.

If the mass number of an element is 16 and the atomic number is 8 then the number of neutrons is

A) 16 B) 8

C) 32 D) 4.

19. $5\sqrt{2} + \sqrt{32}$ ன் மதிப்பு

A) $21\sqrt{2}$ B) $5\sqrt{2}$

C) $32\sqrt{2}$ D) $9\sqrt{2}$.

The value of $5\sqrt{2} + \sqrt{32}$ is

A) $21\sqrt{2}$ B) $5\sqrt{2}$

C) $32\sqrt{2}$ D) $9\sqrt{2}$.

20. இராஜ்யசபாவின் தலைவர்

A) குடியரசுத்தலைவர் B) துணை குடியரசுத்தலைவர்

C) சபாநாயகர் D) பிரதம அமைச்சர்.

The Chairman of the Rajya Sabha is

A) the President of India B) the Vice-President of India

C) the Speaker D) the Prime Minister.

www.kalvinews.com



21. 2001 மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி தமிழ்நாட்டில் கல்வியறிவு பெற்றவர்களின் சதவீதம்

A) 60·5% B) 73·5%

C) 80·5% D) 77·5%.

According to the Census estimate of 2001 the rate of literacy in Tamil Nadu was

A) 60·5% B) 73·5%

C) 80·5% D) 77·5%.

22. சதி ஒழிக்கப்பட்ட ஆண்டு

A) 1828 B) 1829

C) 1835 D) 1838.

Sati was abolished in

A) 1828 B) 1829

C) 1835 D) 1838.

23. "நெடுநல் வாடை" என்பது

A) அகப்புறப்பாட்டு B) அகப்பாட்டு

C) புறப்பாட்டு D) இவற்றுள் எதுவுமில்லை.

"Nedu Nal Vaadai" belongs to

A) Agapurapattu B) Agapattu

C) Purapattu D) None of these.

24. உண்ணக் கூடிய காளான்கள்

A) *அகாரிகஸ் பைஸ்போரஸ்* B) ரைசோபஸ்

C) மியூக்கர் D) நியூரோஸ்போரா.

www.kalvinews.com



Edible mushrooms are

A) *Agaricus bisporous*  B) Rhizopus

C) Mucor  D) Neurospora.

25. தூத்துக்குடியின் மறுபெயர்

A) வைர நகர்  B) முத்து நகர்

C) பொன் நகர்  D) நிலக்கரி நகர்.

The other name of Tuticorin is

A) Diamond city  B) Pearl city

C) Gold city  D) Coal city.

26. அண்ணாமலை பல்கலைக் கழகம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது ?

A) 1926  B) 1924

C) 1929  D) 1922.

Annamalai University was established in

A) 1926  B) 1924

C) 1929  D) 1922.

27. அசல் ரூ. 3000 மற்றும் வட்டி வீதம் 4% க்கு இரண்டு ஆண்டுகளுக்கு தனி வட்டிக்கும் கூட்டு வட்டிக்கும் இடையே கிடைக்கும் வித்தியாசம்

A) Rs. 80·00  B) Rs. 4·80

C) Rs. 6·80  D) Rs. 48·00.

If the principal is Rs. 3000 and rate of interest 4%, then the difference between simple interest and compound interest is

A) Rs. 80·00  B) Rs. 4·80

C) Rs. 6·80  D) Rs. 48·00.

www.kalvinews.com



28. உலகம் இன்று ஒரு கிராமமாக இயங்குவதற்கு காரணம்

A) பசுமைப் புரட்சி B) தகவல் தொடர்புப் புரட்சி

C) நீலப் புரட்சி D) தொழிற்புரட்சி.

World has become a global village due to

A) Green revolution

B) Communication and information revolution

C) Blue revolution

D) Industrial revolution.

29. யூக்ளினாவில் சுவாசம் நடைபெறும் முறை

A) சுருங்குதல் B) உறிஞ்சுதல்

C) பரவல் D) கடத்துதல்.

The method of respiration which takes place in euglena is

A) Contraction B) Absorption

C) Diffusion D) Conduction.

30. சட்லஜ் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை

A) பக்ரா நங்கல் B) ஹிராகுட்

C) தாமோதர் அணை D) ஸ்டான்லி நீர்த்தேக்கம்.

The dam constructed across the river Sutlej is

A) Bhakra-Nangal B) Hirakud

C) Damodar dam D) Stanley Reservoir.

31. தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமையகம் எங்குள்ளது ?

A) திருச்சி B) மதுரை

C) சென்னை D) திருப்பூர்.

www.kalvinews.com



The headquarters of the Tamil Nadu State Human Rights Commission is situated at

A) Trichy  B) Madurai

C) Chennai  D) Tirupur.

32. தமிழ்நாட்டில் ஆங்கில ஆட்சிக்கு எதிராக முதலில் போரிட்டவர்

A) கட்டபொம்மன்  B) புலித்தேவர்

C) சின்ன மருது  D) வேலு நாச்சியார்.

The first war against the British rule was started in Tamil Nadu by

A) Kattabomman  B) Pulithevar

C) Chinna Marudhu  D) Velunachiar.

33. இந்தியாவின் கோதுமைக் களஞ்சியம்

A) பஞ்சாப்  B) ராஜஸ்தான்

C) ஆந்திரப் பிரதேசம்  D) ஒரிஸ்ஸா.

Wheat granary of India is

A) Punjab  B) Rajasthan

C) Andhra Pradesh  D) Orissa.

34. நியூட்டனின் மூன்றாம் விதி .................... உள்ள பொருள்களுக்கு பொருந்தும்.

A) ஓய்வு நிலையில் மட்டும்

B) இயக்க நிலையில் மட்டும்

C) ஓய்வு மற்றும் இயக்க நிலை இரண்டிலும்

D) சமமான நிறை.

Newton's third law is applicable to bodies

A) at rest only  B) in motion only

C) both at rest and in motion  D) with same mass.

www.kalvinews.com



35. குருதியில் உள்ள உலோகம்

A) Al B) Mg

C) Fe D) Cu.

Metal present in blood is

A) Al B) Mg

C) Fe D) Cu.

36. 29, 23, 25, 29, 30, 25, 28 இவற்றின் இடைநிலை

A) 29 B) 23

C) 28 D) 30.

The median of 29, 23, 25, 29, 30, 25, 28 is

A) 29 B) 23

C) 28 D) 30.

37. ஐ. நா. சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்ட நாள்

A) 1945 டிசம்பர் 10 B) 1946 டிசம்பர் 10

C) 1947 டிசம்பர் 10 D) 1948 டிசம்பர் 10.

UN adopted the Universal Declaration of Human Rights on

A) 10th December, 1945 B) 10th December, 1946

C) 10th December, 1947 D) 10th December, 1948.

38. கிருஷ்ணதேவராயரால் எழுதப்பட்ட புத்தகம்

A) ஆமுக்த மால்யதா B) கம்பராமாயணம்

C) சிவஞான போதம் D) மகாபாரதம்.

www.kalvinews.com



The book written by Krishnadevaraya was

A) Amuktha Malyada B) Kambaramayanayam

C) Sivagnana bodham D) Mahabharatam.

39. ''கதை பொதி பாடல்' -.என அழைக்கப்படுவது

A) பெரியபுராணம் B) திருவிளையாடற் புராணம்

C) விஷ்ணு புராணம் D) கந்தபுராணம்.

"Kadhai podhi paadal" is known as

A) Periyapuranam B) Thiruvilaiyadal puranam

C) Vishnu puranam D) Kandha puranam.

40. பசுமை இல்ல வாயு

A) கார்பன் டை ஆக்ஸைடு B) ஆக்ஸிஜன்

C) ஹைட்ரஜன் D) நைட்ரஜன்.

Greenhouse gas is

A) Carbon dioxide B) Oxygen

C) Hydrogen D) Nitrogen.

41. இந்தியாவில் காணப்படும் மலைச்சிகரங்களில் மிக உயர்ந்தது

A) எவரெஸ்ட் B) கஞ்சன் ஜங்கா

C) $K_2$ D) தவளகிரி

The highest peak in India is

A) Mt. Everest B) Mt. Kanchenjunga

C) Mt. $K_2$ D) Mt. Dhoulagiri.

www.kalvinews.com



42. பல்லவ ஆட்சியின் மிகச்சிறிய நிர்வாகப் பிரிவு

A) நாடு  B) கோட்டம்

C) ஊர்  D) மண்டலம்.

The smallest unit of the Pallava administration is

A) Nadu  B) Kottam

C) Oor  D) Mandalam.

43. $n(A) = 5$ எனில், $n(P(A))$ ன் மதிப்பு

A) 32  B) 16

C) 8  D) 64.

If $n(A) = 5$ then $n(P(A))$ is

A) 32  B) 16

C) 8  D) 64.

44. நீராவி என்ஜினை கண்டுபிடித்தவர் யார் ?

A) ஜேம்ஸ்வாட்  B) கோபால்

C) ஆர். பாட்  D) மோகினி சேதை.

Who is the inventor of steam engine ?

A) James Watt  B) Gopal

C) R. Bhatt  D) Mohini Sethi.

45. இரத்தத் தட்டைகள் கீழ்க்காணும் நிகழ்ச்சிக்கு உதவுகிறது

A) நோய் எதிர்ப்புத்தன்மை  B) வாயுக்கடத்தல்

C) இரத்தம் உறைதல்  D) கார-அமில சமன்பாடு.

www.kalvinews.com



Blood platelets help in

A) Immunity
B) Gaseous transport
C) Blood clotting
D) Acid-base balance.

46. அலைகளினால் கடலோரங்களின் அடித்தளம் அரித்து எடுக்கப்படுவதால் முதலில் உருவானவை

A) டோம்போலோ
B) செங்குத்தான சரிவு
C) நீரடி மண் கரை
D) கடற் குகை.

Initially, the cutting action of the waves against the base of coastal land produces

A) Tombolo
B) Cliff
C) Spit
D) Sea cave.

47. தமிழ்நாட்டில் முதல் பெண் மருத்துவர்

A) பண்டித ரமாபாய்
B) டாக்டர் அன்னிபெசன்ட்
C) டாக்டர் முத்துலட்சுமி
D) டாக்டர் சரோஜினி நாயுடு.

The first woman doctor in Tamil Nadu is

A) Pandit Ramabai
B) Dr. Annie Besant
C) Dr. Muthulakshmi
D) Dr. Sarojini Naidu.

48. 1857-ஆம் ஆண்டு பெரும் புரட்சியில், மேற்கு பீகாரின் மிகச் சிறந்த இராணுவத் தளபதி

A) கன்வர் சிங்
B) கோவிந்த் சிங்
C) இரஞ்சித் சிங்
D) இரண்டாம் பகதூர் ஷா.

The most outstanding military leader of Western Bihar in the Great Revolt of 1857 was

A) Kunwar Singh
B) Govind Singh
C) Ranjit Singh
D) Bahadur Shah II.

www.kalvinews.com



49. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ( ISRO ) 1968-ல் ஐக்கிய நாடுகள் சபைக்காக அர்ப்பணித்த ஏவுதளம் அமைந்துள்ள இடம்

A) தும்பா B) சென்னை

C) டெல்லி D) மும்பை.

The location of an ISRO launching station dedicated to the United Nations in 1968 is

A) Thumba B) Chennai

C) Delhi D) Mumbai.

50. கதிர்வீச்சின் அலகு

A) கேண்டிலா B) டையாப்டர்

C) கெல்வின் D) ராண்ட்ஜென்.

The unit of radiation exposure is

A) candela B) dioptre

C) kelvin D) roentgen.

51. இரத்தத்தின் pH மதிப்பு

A) 5·5 — 7·5 B) 4·5 — 5·5

C) 7·3 — 7·5 D) 4·0 — 4·4.

pH value of blood is

A) 5·5 to 7·5 B) 4·5 to 5·5

C) 7·3 to 7·5 D) 4·0 to 4·4.

52. 3, 8, 13, ..... என்ற கூட்டுத்தொடரின் முதல் 11 உறுப்புக்களின் கூடுதல்

A) 380 B) 318

C) 308 D) 388.

www.kalvinews.com



The sum of the first 11 terms of the A.P. 3, 8, 13, ..... is

A) 380 B) 318

C) 308 D) 388.

53. இந்தியாவின் இணைப்பு மொழி

A) பிரெஞ்சு B) ஜப்பானிய மொழி

C) கிரேக்க மொழி D) ஆங்கிலம்.

The link language of India is

A) French B) Japanese

C) Greek D) English.

54. கி. பி. 1025-ல் மாமூத் கஜினியால் தாக்கப்பட்ட புகழ்பெற்ற இந்து ஆலயம் இருந்த இடம்

A) கஜுராஹோ B) சோமநாதபுரம்

C) தில்வாரா D) பூரி ஜகன்நாதர்.

In 1025 A.D., Mahmud of Ghazni attacked the most celebrated Hindu temple at

A) Khajuraho B) Somnath

C) Dilwara D) Puri Jagannath.

55. "ஒவ்வொரு தமிழ் மாணவனும் சிறப்புக்குரிய பெரிய புராணத்தை கருத்தூன்றி படிக்க வேண்டும்" எனக் கூறியவர்

A) கால்டுவெல் B) டாக்டர் ஜி. யு. போப்

C) வீரமாமுனிவர் D) டாக்டர் உ. வே. சா.

Who said, "Every Tamil student should read Periya Puranam in deep" ?

A) Caldwell B) Dr. G. U. Pope

C) Veeramamunivar D) Dr. U. Ve. Sa.

www.kalvinews.com



56. தீவிர வயிற்றுப்போக்கு இந்நோயின் அறிகுறிகள்

A) டியூபர்குளோசிஸ் B) காலரா

C) தொழுநோய் D) ஆன்த்ராக்ஸ்.

Severe diarrhoea is a symptom of

A) Tuberculosis B) Cholera

C) Leprosy D) Anthrax.

57. உலகின் மிக ஆழமான 'மரியானா அகழி' அமைந்துள்ள பெருங்கடல்

A) பசிபிக் பெருங்கடல் B) அட்லாண்டிக் பெருங்கடல்

C) ஆர்டிக் பெருங்கடல் D) இந்தியப் பெருங்கடல்.

The world's deepest 'Marina Trench' is located in

A) Pacific ocean B) Atlantic ocean

C) Arctic ocean D) Indian ocean.

58. பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்தவர்

A) தயானந்த சரஸ்வதி B) இராஜாராம் மோகன்ராய்

C) சர் சையது அகமதுகான் D) அன்னிபெசன்ட்.

The Brahmo Samaj was established by

A) Dayanand Saraswati B) Raja Rammohan Roy

C) Sir Syed Ahmad Khan D) Dr. Annie Besant.

59. $a = 5, b = 3$ எனில் $a^2 + ab$ ன் மதிப்பு

A) 80 B) 40

C) 60 D) 45.

www.kalvinews.com



If $a = 5$, $b = 3$ then the value of $a^2 + ab$ is

A) 80 B) 40

C) 60 D) 45.

60. இந்தியாவில் முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

A) 1947 B) 1951

C) 1956 D) 1961.

The first Five-Year Plan of India was launched in

A) 1947 B) 1951

C) 1956 D) 1961.

61. கீழ்க்கண்டவற்றுள் குறுநாள் தாவரம் எது ?

A) மிராபிலிஸ் B) *நிகோடியானா டொபாக்கம்*

C) *பீட்டா வல்காரிஸ்* D) *ஸ்பைனாசியா ஒலரேஷியா.*

Which one of the following is a short day plant ?

A) Mirabilis B) *Nicotiana tobacum*

C) *Beta vulgaris* D) *Spinacea oleracea.*

62. சமுதாயத்தின் அடிப்படை அங்கம்

A) குடும்பம் B) இல்லம்

C) கிராமம் D) மாநகரம்.

The basic unit of the society is

A) family B) house

C) village D) city.

www.kalvinews.com



63. எதன் காரணமாக இரவீந்திரநாத் தாகூர் ஆங்கில அரசு தனக்கு அளித்த நைட்ஹூட் பட்டத்தை துறந்தார் ?

A) பஞ்சாப் படுகொலை

B) முதல் உலகப்போரில் ஜெர்மனியின் தோல்வி

C) செளரி-செளரா நிகழ்ச்சி

D) காந்தியின் கைது.

Rabindranath Tagore renounced his Knighthood as a measure of protest after

A) Punjab tragedy

B) Defeat of Germany in World War I

C) The Chauri-Chaura incident

D) Gandhiji's arrest.

64. தேசிய வருமானம் ஒரு

A) மத்திய அரசின் வருமானம்

B) மத்திய மற்றும் மாநில அரசின் வருமானம்

C) மொத்த காரணி வருமானம்

D) பொதுத்துறையின் இலாப வருமானம்.

National Income is

A) Income of the Central Government

B) Income of the Central & State Governments

C) Total of factor incomes

D) Profits of the Public sector.

www.kalvinews.com



65. பின்வருவனவற்றுள் எவை முதன்மை நிறங்கள் ?

A) சிவப்பு, பச்சை, நீலம்
B) சிவப்பு, சியான், நீலம்
C) நீலம், சியான், மெஜன்டா
D) ஊதா, சிவப்பு, பச்சை.

Which of the following are primary colours ?

A) Red, green and blue
B) Red, cyan and blue
C) Blue, cyan and magenta
D) Violet, red and green.

66. மீத்தேனின் அமைப்பு

A) எண்முகி
B) நான்முகி
C) சமதள சதுரம்
D) நீள் வடிவம்.

The structure of methane is

A) octahedral
B) tetrahedral
C) square planar
D) linear.

67. ( – 1, – 3 ) மற்றும் ( – 5, – 7 ) என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டுத் துண்டின் நடுப்புள்ளி

A) ( 3, 5 )
B) ( – 3, 5 )
C) ( – 3, – 5 )
D) ( 3, – 5 ).

The mid-point of the line segment joining the points ( – 1, – 3 ) and ( – 5, – 7 ) is

A) ( 3, 5 )
B) ( – 3, 5 )
C) ( – 3, – 5 )
D) ( 3, – 5 ).

68. இந்தியாவில் வாக்களிக்கும் உரிமைக்கான வயது

A) 21 ஆண்டுகள்
B) 25 ஆண்டுகள்
C) 18 ஆண்டுகள்
D) 20 ஆண்டுகள்.

www.kalvinews.com



The age for voting right in India is

A) 21 years B) 25 years

C) 18 years D) 20 years.

69. 'சுதேசி' - என்பதன் அகராதிப் பொருள்

A) பொருளாதார புறக்கணிப்பு B) அந்நிய துணிகள் எரிப்பு

C) சொந்த நாடு D) அந்நியப் பொருட்கள் புறக்கணிப்பு.

'Swadeshi' literally means

A) Economic boycott B) Burnt foreign clothes

C) One's own country D) Boycott foreign goods.

70. முக்கூடலில் சேரும் ஆறுகள்

A) மணிமுத்தாறு, கோரையாறு, பாண்டியாறு

B) வழுதா நதி, சண்முக நதி, வராக நதி

C) தண் பொருனை, சிற்றாறு, கோதண்டராம ஆறு

D) வைகை, பொருனை, தாமிரபரணி.

The rivers merge in Mukoodal are

A) Manimutharu, Koraiyaru, Pandiyaru

B) Vazhutha Nadhi, Shanmuga Nadhi, Varaaga Nadhi

C) Than Porunai, Sitraru, Kothandarama Aaru

D) Vaigai, Porunai, Thamirabarani.

71. எலும்புருக்கி நோய்க்கு கொடுக்கப்படும் மருந்து

A) ஐசோ நியாசிட் B) பென்சிலின்

C) அசிடோதைமிடின் D) இவை அனைத்தும்.

www.kalvinews.com



Effective drug for TB is

A) Isoniazid B) Penicillin

C) Azidothymidine D) All of these.

72. புதிய கல்விக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு

A) 1980 B) 1985

C) 1986 D) 1983.

New Educational Policy was announced in

A) 1980 B) 1985

C) 1986 D) 1983.

73. சுதந்திர இந்தியாவின் முதல் இந்தியத் தலைமை ஆளுநர்

A) காந்திஜி B) நேரு

C) ஜின்னா D) இராஜாஜி.

The first Indian Governor-General of free India was

A) Gandhiji B) Nehru

C) Jinnah D) Rajaji.

74. ஓர் இரு சக்கர ஊர்தியின் குறித்த விலை ரூ. 1,700. அந்த நிறுவனம் 10% தள்ளுபடி அளித்திடின், அந்த வண்டியின் விற்பனை விலை

A) ரூ. 1,500 B) ரூ. 1,350

C) ரூ. 1,530 D) ரூ. 1,300.

The marked price of a bicycle is Rs. 1,700. If the company gives 10% discount, then the selling price of the bicycle is

A) Rs. 1,500 B) Rs. 1,350

C) Rs. 1,530 D) Rs. 1,300.

www.kalvinews.com



75. இலாப நோக்கத்திற்காக செயல்படாத வங்கியினை குறிப்பிடுக.

A) ஆந்திரா வங்கி B) இந்திய ரிசர்வ் வங்கி

C) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி D) கனரா வங்கி.

The Bank whose motive is not profit making is

A) Andhra Bank B) RBI

C) IOB D) Canara Bank.

76. இவற்றுள் ஒன்று சைலத்தின் செல்வகை அல்ல

A) ட்ரக்கீடுகள் B) சைலக் குழாய்கள்

C) துணை செல்கள் D) சைலம் நார்கள்.

Which one of the following is not a kind of cell of xylem tissue ?

A) Tracheids B) Tracheae

C) Companion cells D) Wood fibres.

77. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| a) | மைசூர் | 1. | சர்க்கரை ஆலை |
| b) | உத்திர பிரதேசம் | 2. | கம்பளி ஆடை |
| c) | பெங்களூர் | 3. | பட்டு ஆடை |
| d) | தாரிவால் | 4. | மின் சாதன பொருட்கள். |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 3 | 1 | 2 | 4. |

www.kalvinews.com



Match **List I** with **List II** correctly and select your answer using the codes given below :

| List I | | List II | |
|---|---|---|---|
| a) | Mysore | 1. | Sugar industry |
| b) | Uttar Pradesh | 2. | Woollen textiles |
| c) | Bangalore | 3. | Silk textiles |
| d) | Dhariwal | 4. | Electronic goods. |

*Codes :*

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 3 | 1 | 2 | 4. |

78. வாக்காளர் அடையாள அட்டையினை வழங்குவது யார் ?

A) இந்திய தேர்தல் ஆணையம்　　B) மாவட்ட ஆட்சியர்

C) மாநகராட்சி ஆணையர்　　D) தலைவர்.

Who issues the Voter Identity Card ?

A) Election Commission of India　　B) District Collector

C) Municipal Commissioner　　D) Chairman.

79. மங்கள் பாண்டே கொழுப்பு தடவிய தோட்டாவை உபயோகிக்க மறுத்து தன் மேலதிகாரியை சுட்டுக் கொன்றது எங்கு ?

A) வேலூர்　　B) பேரக்பூர்

C) கான்பூர்　　D) மீரட்.

www.kalvinews.com



Mangal Pandey refused to use the greased cartridge and shot down his sergeant at

A) Vellore B) Barrackpore

C) Cawnpore D) Meerut.

80. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உற்பத்தியை இந்தியா ஒரு சில ஆண்டுகளில் முந்தக்கூடிய வேளாண் உற்பத்திப் பொருள்

A) நெல் B) கோதுமை

C) சிறு தானியங்கள் D) தோட்டப் பயிர்கள்.

The agricultural production in which India may outsmart the USA in the near future is

A) Paddy B) Wheat

C) Millets D) Plantations.

81. ஆசியாவிலேயே முதலாக, நாய்களுக்கென்றே பிரத்யேகமாக செயல்படும் இரத்த வங்கியை தொடங்கியது

A) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி

B) கர்நாடக கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி

C) ஆந்திர கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி

D) ஜவஹர்லால் நேரு கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி.

The first blood bank exclusively for dogs in Asia was opened by

A) Tamil Nadu Veterinary and Animal Sciences University

B) Karnataka Veterinary and Animal Sciences University

C) Andhra Veterinary and Animal Sciences University

D) Jawaharlal Nehru Veterinary and Animal Sciences University.

www.kalvinews.com



82. சைபர் குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கான நீதிமன்றம் முதன்முதலில் இந்திய அரசால் அமைக்கப்பட்ட ஆண்டு

A) 2010 B) 2009

C) 2008 D) 2007.

The Cyber crimes regulation court was established by the Government of India in the year

A) 2010 B) 2009

C) 2008 D) 2007.

83. எவருக்கும் தானமாகத் தரக்கூடிய இரத்தவகை யாது ?

A) O B) A

C) B D) AB.

Which is the Universal donor blood group ?

A) O B) A

C) B D) AB.

84. ஓசோன் படலம் இதை உறிஞ்சுகிறது

A) மீத்தேன் B) குளோரின்

C) புறஊதா கதிர்கள் D) காஸ்மிக் கதிர்கள்.

Ozone layer absorbs

A) Methane B) Chlorine

C) Ultraviolet radiation D) Cosmic rays.

85. உலகின் மலிவு விலை கார்

A) நானோ, டாடா மோட்டர்ஸ் B) டெய்ம்லர், மெர்சிடிஸ் பென்ஸ்

C) மாருதி சுசுகி D) ஹூண்டாய்.

www.kalvinews.com



World's cheapest car produced is

A) Nano by Tata Motors
B) Daimler Mercedes-Benz
C) Maruti-Suzuki
D) Hyundai.

86. பின்வருவனவற்றுள் எந்த கருவி உடலின் குறுக்கு வெட்டு பிம்பங்களை உண்டாக்க உதவுகிறது ?

A) என்டோஸ்கோப்
B) லாப்ராஸ்கோப்
C) இ.சி.ஜி. உபகரணம்
D) சி. டி. ஸ்கேன்னர்.

Which of the following machines is used to take sectional images of the body ?

A) Endoscope
B) Laparoscope
C) ECG machine
D) CT Scanner.

87. கணினியின் மூளை என்று அழைக்கப்படுவது

A) CPU
B) UPS
C) CAD
D) IBM.

The brain of a computer is

A) CPU
B) UPS
C) CAD
D) IBM.

88. "Science and Sustainable Food Security" என்ற புத்தகத்தை எழுதியவர்

A) M. S. சுவாமிநாதன்
B) K. இராதாகிருஷ்ணன்
C) டாக்டர் ராஜீவ் ஷா
D) ரட்டன்குமார் சின்ஹா.

The book "Science and Sustainable Food Security" is written by

A) M. S. Swaminathan
B) K. Radhakrishnan
C) Dr. Rajiv Shah
D) Ratan Kumar Sinha.

89. கிரிக்கெட்டில் அதிக ரன்கள் டெஸ்ட் தொடரில் எடுத்தவர் யார் ?

A) M. S. டோனி
B) ராகுல் டிராவிட்
C) சச்சின் டெண்டுல்கர்
D) கவாஸ்கர்.

www.kalvinews.com



Who is the highest test scorer in cricket ?

A) M. S. Dhoni B) Rahul Dravid

C) Sachin Tendulkar D) Gavaskar.

90. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பு, நாட்டின் .................. வது மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆகும்.

A) 11 B) 12

C) 13 D) 15.

The Census 2011 is the .................. National Census.

A) 11th B) 12th

C) 13th D) 15th.

91. 21ம் நூற்றாண்டில் சக்தி வாய்ந்த சுனாமி வந்த நாள்

A) 26. 11. 2004 B) 26. 11. 2005

C) 26. 10. 2004 D) 26. 12. 2004.

The powerful Tsunami attack of 21st Century was on

A) 26. 11. 2004 B) 26. 11. 2005

C) 26. 10. 2004 D) 26. 12. 2004.

92. உலகத்தில் "நீரிழிவு நோய் தினம்" என்று அனுஷ்டிக்கப்படுகிறது ?

A) மே 27 B) ஏப்ரல் 27

C) ஜூன் 27 D) ஜூலை 27.

The "World Diabetes Day" is observed on

A) May 27 B) April 27

C) June 27 D) July 27.

93. மின்சார இரயிலை இயக்கும் முதல் பெண் ஓட்டுநர்

A) திலகவதி B) அமராவதி

C) பிரேமா குமாரி D) விஜயலட்சுமி.

www.kalvinews.com



The first woman electric train driver is

A) Thilagavathy B) Amaravathy

C) Prema Kumari D) Vijayalakshmi.

94. இந்திய தேசிய அடையாள அட்டையில் உள்ள இலக்கங்களின் எண்ணிக்கை

A) 12 B) 10

C) 13 D) 11.

The number digits in Indian National Identification card are

A) 12 B) 10

C) 13 D) 11.

95. தென் ஆப்பிரிக்காவின் முதல் கருப்பின குடியரசுத் தலைவர்

A) நெல்சன் மண்டேலா B) ஒபாமா

C) ராஜபக்சே D) டிடோ.

The first black President of South Africa is

A) Nelson Mandela B) Obama

C) Rajapakshe D) Tito.

96. 2010 ஆம் ஆண்டு இந்தியாவின் நிதி அமைச்சர்

A) ஜெய்ராம் ரமேஷ் B) கபில்சிபில்

C) ப. சிதம்பரம் D) பிரணாப் முகர்ஜி.

The Finance Minister of India in 2010 was

A) Jairam Ramesh B) Kapil Sibal

C) P. Chidambaram D) Pranab Mukherjee.

97. 2010 ஆம் ஆண்டின் லோக்சபாவின் சபாநாயகர்

A) ஜி. கே. பிள்ளை B) யஷ்பால்

C) மீராகுமார் D) ராஜ் பரத்வாஜ்.

www.kalvinews.com



The Speaker of Lok Sabha in 2010 was

A) G. K. Pillai B) Yashpal

C) Meira Kumar D) Raj Bharadwaj.

98. இந்திய அறிவியல் நிறுவனம் ( IISc ) உள்ள நகரம்

A) சென்னை B) பெங்களூர்

C) டில்லி D) மும்பை.

In which city is Indian Institute of Science ( IISc ) located ?

A) Chennai B) Bangalore

C) Delhi D) Mumbai.

99. முதலாம் இராஜராஜனால் கட்டப்பட்ட கோவில் எது ?

A) தஞ்சாவூர் பெரிய கோவில் B) மதுரை மீனாட்சியம்மன் கோவில்

C) ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் D) சிதம்பரம் நடராசர் கோவில்.

The temple constructed by Rajaraja Chola I is

A) Thanjavur big temple B) Madurai Meenakshi temple

C) Sri Villiputtur Andal temple D) Chidambaram Natrajar temple.

100. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு அவையின் தற்காலிக உறுப்பினராக இந்தியா தேர்வான நாள்

A) அக்டோபர் 12, 2010 B) நவம்பர் 12, 2009

C) டிசம்பர் 12, 2008 D) செப்டம்பர் 12, 2010.

India was selected as a non-permanent member of the United Nations Security Council on

A) October 12, 2010 B) November 12, 2009

C) December 12, 2008 D) September 12, 2010.

www.kalvinews.com



101. பட்டியல் I ல் உள்ள சொற்களை பட்டியல் II-ல் உள்ள சொற்பொருளறிந்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I *சொல்* | பட்டியல் II *பொருள்* |
|---|---|
| 1. புள் | அ. போற்றும் |
| 2. தருக்கள் | ஆ. மனம் |
| 3. ஏத்தும் | இ. பறவை |
| 4. அகம் | ஈ. மரங்கள். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | அ | ஆ |
| B) | ஈ | அ | ஆ | இ |
| C) | அ | ஆ | ஈ | இ |
| D) | ஆ | ஈ | இ | அ. |

102. பட்டியல் I ல் உள்ள நூல்களை பட்டியல் II-ல் உள்ள நூலாசிரியர்களுடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I *நூல்* | பட்டியல் II *நூலாசிரியர்* |
|---|---|
| 1. சங்கொலி | அ. பகழிக் கூத்தர் |
| 2. கனிச்சாறு | ஆ. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் |
| 3. திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் | இ. ஆசிரியர் பெயர் தெரியவில்லை |
| 4. தமிழ்விடு தூது | ஈ. பெருஞ்சித்திரனார். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | இ | அ | ஆ |
| B) | இ | அ | ஆ | ஈ |
| C) | ஆ | ஈ | அ | இ |
| D) | அ | ஆ | இ | ஈ. |

www.kalvinews.com



103. பட்டியல் I ல் உள்ள நூல்களை பட்டியல் II-ல் உள்ள நூலாசிரியர்களுடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| *நூல்* | | *நூலாசிரியர்* | |
| 1. | பூஞ்சோலை | அ. | இராமலிங்க அடிகள் |
| 2. | கைவளை | ஆ. | கவிஞர் இலத்தூர் கி. சங்கரநாராயணன் |
| 3. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | இ. | திருவள்ளுவர் |
| 4. | உலகப் பொதுமறை | ஈ. | அருள்தந்தை சி. மணிவளவன் |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | இ | ஆ | ஈ |
| B) | இ | ஆ | அ | ஈ |
| C) | ஆ | ஈ | அ | இ |
| D) | ஈ | அ | இ | ஆ. |

104. பட்டியல் I ஐ பட்டியல் II-ல் உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| 1. | பாண்டியநாடு | அ. | வஞ்சி |
| 2. | சோழநாடு | ஆ. | மதுரை |
| 3. | சேரநாடு | இ. | காஞ்சி |
| 4. | தொண்டைநாடு | ஈ. | புகார். |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | ஈ | அ | இ |
| B) | இ | ஈ | அ | ஆ |
| C) | அ | ஆ | இ | ஈ |
| D) | ஈ | ஆ | அ | இ. |

www.kalvinews.com



105. **பட்டியல் I** ல் உள்ள நூல்களை **பட்டியல் II**-ல் உள்ள நூலாசிரியர்களுடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| *நூல்* | *நூலாசிரியர்* |
| 1. ஓர் இரவு | அ. மு. வரதராசன் |
| 2. கரித்துண்டு | ஆ. அறிஞர் அண்ணா |
| 3. குயில்பாட்டு | இ. பாரதிதாசன் |
| 4. அழகின் சிரிப்பு | ஈ. பாரதியார். |

*குறியீடுகள் :*

| | **1** | **2** | **3** | **4** |
|---|---|---|---|---|
| A) | அ | இ | ஈ | ஆ |
| B) | ஆ | ஈ | இ | அ |
| C) | ஈ | இ | அ | ஆ |
| D) | ஆ | அ | ஈ | இ. |

106. 'பாவலரேறு' என்று அழைக்கப்படுபவர்

A) புலவர் குழந்தை B) பெருந்தேவனார்

C) பெருஞ்சித்திரனார் D) வாணிதாசன்.

107. 'இயற்கை அன்பு' என்று போற்றப்படும் நூல்

A) திருக்குறள் B) பெரிய புராணம்

C) திருவாசகம் D) தேவாரம்.

108. 'அண்ணாமலைக் கவிராஜன்' எனப்படுபவர்

A) அண்ணாமலைச் செட்டியார் B) சின்ன அண்ணாமலை

C) அண்ணாமலை ரெட்டியார் D) அழ. வள்ளியப்பா.

109. 'மண் தேய்த்த புகழினான்' இத்தொடரால் குறிக்கப்படுபவர்

A) இராவணன் B) இராமன்

C) கோவலன் D) இலக்குவன்.

www.kalvinews.com



110. இரட்டைக்காப்பியங்கள் என்று அடைமொழி பெற்ற நூல்கள்

A) சிலப்பதிகாரம், மணிமேகலை
B) மணிமேகலை, சிந்தாமணி
C) சிந்தாமணி, குண்டலகேசி
D) குண்டலகேசி, வளையாபதி.

111. பிரித்து எழுதுக : நல்லஃதுறும்

A) நல்ல + அஃது + உறும்
B) நன்மை + அஃது + உறும்
C) நல்லஃது + உறும்
D) நன்மை + அது + உறும்.

112. பிரித்து எழுதுக : புறத்துறுப்பு

A) புறம் + உறுப்பு
B) புறத்து + உறுப்பு
C) புற + உறுப்பு
D) புற + துறுப்பு.

113. பிரித்து எழுதுக : தரமில்லை

A) தர + இல்லை
B) தர + மில்லை
C) தரம் + இல்லை
D) தரம் + இல் + ஐ.

114. பிரித்து எழுதுக : வெங்கதிர்

A) வெங் + கதிர்
B) வெங்கு + கதிர்
C) வெம்மை + கதிர்
D) வெண்மை + கதிர்.

115. பிரித்து எழுதுக : மற்றிரண்டு

A) மற்று + இரண்டு
B) மற்ற + இரண்டு
C) மற் + றிரண்டு
D) மற்ற + விரண்டு.

116. எதிர்சொல் தருக : 'இளமை'

A) முதுமை
B) வறுமை
C) சிறுமை
D) அகவை

117. எதிர்சொல் தருக : 'இழந்தான்'

A) அடைந்தான்
B) பெற்றான்
C) இழந்திலன்
D) ஈட்டினன்.

118. எதிர்சொல் தருக : 'பெருமை'

A) சிறுமை
B) வறுமை
C) வெம்மை
D) சிறப்பு.

www.kalvinews.com



119. எதிர்சொல் தருக : 'இம்மை'

A) உண்மை
B) இல்லாமை
C) இயலாமை
D) மறுமை.

120. எதிர்சொல் தருக : 'இசை'

A) மருள்
B) எளிமை
C) வசை
D) முடிவு.

121. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

A) கலித்தொகை
B) குறிஞ்சிப்பாட்டு
C) மதுரைக்காஞ்சி
D) முல்லைப்பாட்டு.

122. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

A) மா
B) பலா
C) முருங்கை
D) வாழை.

123. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

A) நகை
B) இனிப்பு
C) அழுகை
D) வெகுளி.

124. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

A) படி
B) எழுது
C) சொல்
D) உண்டான்

125. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :

A) நூலாடை
B) பாவாடை
C) மேலாடை
D) பாலாடை.

126. ஒருமை பன்மை பிழைகளை நீக்குக :

A) காவல்துறை அதிகாரி திருடனைப் பிடித்தார்
B) காவல்துறை அதிகாரிகள் திருடனைப் பிடித்தான்
C) காவல்துறை அதிகாரி திருடனைப் பிடித்தார்கள்
D) காவல்துறை அதிகாரிகள் திருடனைப் பிடித்தது.

www.kalvinews.com



127. ஒருமை பன்மை பிழைகளை நீக்குக :

A) ஆதவன் பசி போக்க உணவு வேண்டினார்கள்

B) ஆதவனும் வேலவனும் பசி போக்க உணவு வேண்டினான்

C) ஆதவனும் வேலவனும் பசி போக்க உணவு வேண்டியது

D) ஆதவன் பசி போக்க உணவு வேண்டினான்.

128. பிறமொழிச் சொற்களை நீக்கிய வாக்கியத்தை தேர்வு செய்க :

A) காலேஜில் அட்மிஷன் முடிந்தது

B) கல்லூரியில் அட்மிஷன் முடிந்தது

C) கல்லூரியில் சேர்க்கை முடிந்தது

D) காலேஜில் சேர்க்கை முடிந்தது.

129. சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்க :

A) தண்ணீர் பற்றாக்குறை நீங்கத் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்

B) தண்ணீர்ப் பற்றாக்குறை நீங்க தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்

C) தண்ணீர் பற்றாக்குறை நீங்க தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்

D) தண்ணீர்ப் பற்றாக்குறை நீங்கத் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

130. வழூஉச் சொற்கள் நீக்கிய வாக்கியத்தை தேர்வு செய்க :

A) அகல் விளக்கில் என்னை ஊற்றுக

B) அகல் விளக்கில் எண்ணை ஊற்றுக

C) அகல் விளக்கில் எண்ணெய் ஊற்றுக

D) அகல் விளக்கில் எண்ண ஊற்றுக.

131. Wrong : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

A) தவறு B) சரி

C) பன்மை D) ஒருமை.

132. Favourite : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

A) சிறப்பற்ற B) விருப்பத்திற்குரிய

C) தகுதியான D) நேர்மையான.

133. Character : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

A) நடத்தை B) சிரத்தை

C) பரத்தை D) மறத்தை.

www.kalvinews.com



134. Planets : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

A) விண்மீன்கள் B) கதிரவன்

C) கோள்கள் D) வெள்ளி.

135. Travel : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

A) ஊர்தி B) பேருந்து

C) பயணம் D) சுற்றுலா.

136. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | கல் | கள் |
|---|---|---|
| A) | செங்கல் | மது |
| B) | படி | வாது |
| C) | கல்வி | சூது |
| D) | கருங்கல் | மாது |

137. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | குளி | குழி |
|---|---|---|
| A) | பாரோடு | உள்ளம் |
| B) | வேரோடு | வெள்ளம் |
| C) | நீராடு | பள்ளம் |
| D) | பாராட்டு | கள்ளம். |

138. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | அரி | அறி |
|---|---|---|
| A) | அடி | திருமால் |
| B) | கடல் | விலங்கு |
| C) | வெட்டு | தெரிந்துகொள் |
| D) | தாமரை | பூ. |

139. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | அன்னம் | அண்ணம் |
|---|---|---|
| A) | சோறு | பல் |
| B) | உணவு | உதடு |
| C) | பறவை | மேல்வாய் |
| D) | காகம் | கீழ்வாய். |

www.kalvinews.com



140. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | வலி | வளி |
|---|---|---|
| A) | வலித்தல் | தேவலோகம் |
| B) | ஒழிதல் | கடல் |
| C) | வழி | ஆகாயம் |
| D) | வலிமை | காற்று. |

141. 'உ' என்னும் ஒரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது ?

A) மகிழ்ச்சி B) கோபம்

C) துன்பம் D) சிரிப்பு.

142. 'கா' என்னும் ஒரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது ?

A) சோலை B) மாலை

C) ஓலை D) வேலை..

143. 'ஈ' என்னும் ஒரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது ?

A) எடுத்தல் B) கொடுத்தல்

C) பார்த்தல் D) செய்தல்.

144. 'ஔ' என்னும் ஒரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது ?

A) விண் B) பாதாளம்

C) சுவர்க்கம் D) பூமி.

145. திங்கள்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை - சீர் இயைபினைக் கண்டறிக.

A) திங்கள்முடி, சூடுமலை B) சூடுமலை, யாடுமலை

C) திங்கள்முடி, தென்றல்விளை D) சூடுமலை, தென்றல்விளை.

146. 'கீ' என்னும் ஒரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது ?

A) சேவல் கூவுதல் B) குயில் கூவுதல்

C) கிளிக்குரல் D) மயில் அகவுதல்.

147. 'வந்த' — இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க.

A) வரு B) வருக

C) வந்து D) வா.

www.kalvinews.com



148. 'ஒளிர்வான்' — இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க.

A) ஒளிர
B) ஒளிர்
C) ஒளிரா
D) ஒளிரும்.

149. 'புக்கான்' — இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க.

A) புகு
B) புக்கு
C) புகுந்து
D) புகுத்து.

150. 'மருண்டு' — இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க.

A) மருண்
B) மருட்டு
C) மருல்
D) மருள்.

151. 'அழைப்பு' — இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க.

A) அழைத்தல்
B) அளை
C) அழை
D) அழையா.

152. 'பொறு' — என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்க.

A) பொறுத்தார்
B) பொறுத்து
C) பொறுமை
D) பொறுத்த.

153. 'நில்' — என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்ந்தெடுக்க.

A) நின்ற
B) நின்று
C) நிற்கின்ற
D) நின்றான்.

154. 'நடு' — என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரை தேர்ந்தெடுக்க.

A) நட்டல்
B) நடும்
C) நடா
D) நடுவு.

155. 'ஒழி' — என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்ந்தெடுக்க.

A) ஒழித்த
B) ஒழிதல்
C) ஒழித்தவன்
D) ஒழித்து.

156. 'அழு' — என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்க.

A) அழுத
B) அழுது
C) அழுதல்
D) அழுவாளை.

www.kalvinews.com



157. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

A) கவ்வு, கள், கல், கர்வம்
B) கர்வம், கவ்வு, கல், கள்
C) கள், கர்வம், கவ்வு, கல்
D) கர்வம், கல், கவ்வு, கள்.

158. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

A) குழந்தை, கூர்வேல், கேள்வி, கோதை
B) கோதை, கேள்வி, கூர்வேல், குழந்தை
C) கேள்வி, கூர்வேல், குழந்தை, கோதை
D) கூர்வேல், குழந்தை, கோதை, கேள்வி.

159. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

A) அந்தணர், ஆண்மை, ஆற்றல், ஏக்கம்
B) ஆண்மை, ஏக்கம், அந்தணர், ஆற்றல்
C) ஆற்றல், அந்தணர், ஆண்மை, ஏக்கம்
D) ஏக்கம், அந்தணர், ஆற்றல், ஆண்மை.

160. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

A) சென்று, சார்பு, சால்பு, மூழ்கு
B) சார்பு, சால்பு, மூழ்கு, சென்று
C) சார்பு, சால்பு, சென்று, மூழ்கு
D) மூழ்கு, சென்று, சால்பு, சார்பு.

161. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

A) படம், பட்டு, படி, படாடோபம்
B) பட்டு, படம், படாடோபம், படி
C) படாடோபம், படி, படம், பட்டு
D) படி, படாடோபம், படம், பட்டு.

162. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) காவியத்தைப்படி இளங்கோ எழுதிய கண்ணகியின்
B) இளங்கோ எழுதிய கண்ணகியின் காவியத்தைப்படி
C) காவியத்தைப்படி கண்ணகியின் எழுதிய இளங்கோ
D) கண்ணகி இளங்கோ எழுதிய காவியத்தைப்படி.

www.kalvinews.com



163. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) பாரம்பரியம் நீண்ட ஆயுர்வேதம் உடையது

B) உடையது ஆயுர்வேதம் நீண்ட பாரம்பரியம்

C) ஆயுர்வேதம் உடையது பாரம்பரியம் நீண்ட

D) ஆயுர்வேதம் நீண்ட பாரம்பரியம் உடையது.

164. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) இரண்டு திருக்குறளில் அதிகாரங்களில் சிதம்பரனாருக்கு எல்லையற்ற ஆர்வம்

B) இரண்டு எல்லையற்ற ஆர்வம் திருக்குறளில் அதிகாரங்களில் சிதரம்பரனாருக்கு

C) சிதம்பரனாருக்குத் திருக்குறளில் இரண்டு அதிகாரங்களில் எல்லையற்ற ஆர்வம்

D) இரண்டு சிதம்பரனாருக்குத் திருக்குறளில் அதிகாரங்களில் எல்லையற்ற ஆர்வம்.

165. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) நெருப்பு-மனித குலம் கண்ட முதல் அறிவியல் கண்டுபிடிப்பு

B) மனிதகுலம் கண்ட முதல் அறிவியல் கண்டுபிடிப்பு நெருப்பு

C) அறிவியல் கண்டுபிடிப்பு மனிதகுலம் கண்ட முதல் நெருப்பு

D) முதல் நெருப்பு மனிதகுலம் கண்ட அறிவியல் கண்டுபிடிப்பு.

166. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

A) சடையும் பனித்த பவளம் போல் உதடும்

B) பவளம் போல பனித்த சடையும் உதடும்

C) பனித்த சடையும் பவளம் போல் உதடும்

D) பனித்த போல் சடையும் பவளம் உதடும்.

167. 'திண்டிவனம்' — பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) பொருட்பெயர் B) சினைப்பெயர்

C) இடப்பெயர் D) காலப்பெயர்.

168. 'நாழிகை' — பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) இடப்பெயர் B) தொழிற்பெயர்

C) பண்புப்பெயர் D) காலப்பெயர்.

169. 'வாய்' — பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) பொருட்பெயர் B) சினைப்பெயர்

C) தொழிற்பெயர் D) காலப்பெயர்.

www.kalvinews.com



170. 'பூங்கா' — பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) தொழிற்பெயர் B) பொருட்பெயர்

C) காலப்பெயர் D) இடப்பெயர்.

171. 'நீளம்' — பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) தொழிற்பெயர் B) காலப்பெயர்

C) பொருட்பெயர் D) பண்புப்பெயர்.

172. 'கெடுப்பதூஉம்' — என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) சொல்லிசையளபெடை B) இன்னிசையளபெடை

C) இசைநிறையளபெடை D) செய்யுளிசையளபெடை.

173. 'சொலல்' — என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) பண்புப்பெயர் B) இடப்பெயர்

C) தொழில்பெயர் D) காலப்பெயர்.

174. 'நகையும் உவகையும்' — என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) வினைமுற்று B) எண்ணுமை

C) முதற்போலி D) பண்புப்பெயர்.

175. 'இரீஇ' — என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) இன்னிசை அளபெடை B) சொல்லிசை அளபெடை

C) வினைச்சொல் D) வினைமுற்று.

176. 'உறுபடை' — என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) வேற்றுமைத்தொடர் B) பெயரெச்சத் தொடர்

C) வினையெச்சத் தொடர் D) உரிச்சொற்றொடர்.

177. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

"அழகன் குழல் ஊதினான்"

A) அழகன் எதை ஊதினான் ?

B) அழகன் ஊதிய பொருள் எது ?

C) குழலின் பயன்பாடு யாது ?

D) அழகன் இசைத்தது எது ?

www.kalvinews.com



178. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

"சேரமான் இரும்பொறையின் அவைப்புலவர் பொய்கையார்"

A) சேரமான் இரும்பொறையின் நண்பர் யார் ?

B) சேரமான் இரும்பொறையின் அவைப்புலவர் யார் ?

C) இரும்பொறை எந்த நாட்டை ஆண்ட மன்னன் ?

D) பொய்கையார் யார் ?

179. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

"உள்ளம் என்பது மனம்"

A) உள்ளம் என்பது எது ?

B) மனமே உள்ளம் என்பது சரியா ?

C) உள்ளத்தின் சிறப்பு யாது ?

D) உள்ளம் மனம் இரண்டும் ஒன்றா ?

180. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

"ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று குண்டலகேசி"

A) ஐம்பெருங்காப்பியங்கள் யாவை ?

B) குண்டலகேசி ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றா ?

C) ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று எது ?

D) குண்டலகேசி பெருங்காப்பியமா ?

181. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :

"நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவன் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன்"

A) கலம்பகம் சிற்றிலக்கியமா ?

B) கலம்பகத்தின் உறுப்புகள் எத்தனை ?

C) பல்லவ மன்னன் யார் ?

D) நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவன் யார் ?

182. "புலவரே, பரிசைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அரசன் கூறினான்" – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

A) செய்தி வாக்கியம்

B) அயற்கூற்று வாக்கியம்

C) நேர்க்கூற்று வாக்கியம்

D) தொடர்வாக்கியம்.

www.kalvinews.com



183. "மாதவி தோழியிடம் தான் புத்தகம் கொண்டு வருவதாகக் கூறினாள்" – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

A) நேர்க்கூற்று

B) கலவை வாக்கியம்

C) செய்தி வாக்கியம்

D) அயற்கூற்று வாக்கியம்.

184. "செயற்கைக்கோள் அறிவியல் அறிஞர்களால் விண்ணில் ஏவப்பட்டது" – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

A) செய்வினை வாக்கியம்

B) உடன்பாட்டு வாக்கியம்

C) எதிர்மறை வாக்கியம்

D) செயப்பாட்டு வினை வாக்கியம்.

185. "தூய்மையுடன் இரு, தன்னலமற்று இரு" – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக..

A) செய்திவாக்கியம்

B) உடன்பாட்டு வாக்கியம்

C) எதிர்மறை வாக்கியம்

D) விழைவு வாக்கியம்.

186. "ஆசிரியர் இலக்கணம் கற்பித்தார்" – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

A) செய்தி வாக்கியம்

B) எதிர்மறை வாக்கியம்

C) செயப்பாட்டு வினைவாக்கியம்

D) செய்வினை வாக்கியம்.

187. தன்வினைச் சொற்றொடரைக் கண்டறிக.

A) கம்பர் இராமாயணத்தை இயற்றினார்

B) கம்பரால் இராமாயணம் இயற்றப்பட்டது

C) கம்பர் இராமாயணத்தை இயற்றுவித்தார்

D) இராமாயணம் கம்பர் இயற்றியது.

188. பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக.

A) மாதவி நடனம் கற்பித்தாள்

B) மாதவி நடனம் கற்றாள்

C) நடனம் மாதவியால் கற்பிக்கப்பட்டது

D) நடனத்தை மாதவி கற்றாள்.

189. செய்வினை வாக்கியத்தைக் கண்டறிக :

A) நாடகம் மக்கள் பார்த்தது

B) மக்கள் நாடகம் பார்த்தனர்

C) மக்களால் நாடகம் பார்க்கப்பட்டது

D) நாடகத்தை மக்களால் பார்க்கப்பட்டது.

www.kalvinews.com



190. செயப்பாட்டு வினை வாக்கியம் கண்டறிக :

A) ஆசிரியர் என்னைப் பாராட்டினார்
B) நான் ஆசிரியரால் பாரட்டப்பட்டேன்
C) ஆசிரியர் பாராட்டினார் என்னை
D) என்னை ஆசிரியர் பாராட்டினார்.

191. தன்வினைச் சொற்றொடரைக் கண்டறிக.

A) சீறாப்புராணம் உமறுப்புலவரால் இயற்றப்பட்டது
B) இயற்றினார் சீறாப்புராணத்தை உமறுப்புலவர்
C) உமறுப்புலவர் சீறாப்புராணத்தை இயற்றினார்
D) சீறாப்புராணம் உமறுப்புலவர் இயற்றுவித்தார்.

192. "பசுத்தோல் போர்த்திய புலி போல" — இவ்வுவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்க :

A) போற்றுதல்
B) ஏமாற்றுதல்
C) வணங்குதல்
D) அஞ்சுதல்.

193. "பாம்புக்கு பால் ஊட்டி வளர்த்தால் போல" — இவ்வுவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்க :

A) நம்பகத்தன்மை
B) அவசியமாக்குதல்
C) கொடூரத்தன்மை
D) அவசரமாக்குதல்.

194. "வெந்தபுண்ணில் வேல் பாய்ந்தது போல" — இவ்வுவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்க :

A) அதிக இன்பம்
B) மேலும் மேலும் துன்பம்
C) மகிழ்ச்சி
D) வெறுப்பு.

195. "இருதலைக் கொள்ளி எறும்பைப் போல" — இவ்வுவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்க :

A) சலிப்பு
B) தவிப்பு
C) இழப்பு
D) மறுப்பு.

196. "அரசனை நம்பி புருசனை கைவிட்டது போல" — இவ்வுவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்க :

A) நகைச்சுவை
B) ஏமாற்றம்
C) நம்பிக்கை
D) வெற்றி.

www.kalvinews.com



197. தேவரும் பிழைத்திலர் தெய்வ வேதியர்

ஏவரும் பிழைத்திலர் அறமும் ஈறின்றால் - அடி எதுகையைக் கண்டறிக.

A) தேவரும் — தெய்வ

B) தேவரும் — பிழைத்திலர்

C) ஏவரும் — அறமும்

D) தேவரும் — ஏவரும்

198. கள்ளாமை வேண்டும் கடிய வருதலால் - சீர்மோனையை எடுத்தெழுதுக.

A) கள்ளாமை — கடிய

B) கள்ளாமை — வேண்டும்

C) கள்ளாமை — வருதலால்

D) வேண்டும் — வருதலால்.

199. ஆதிரை நல்லாள் ஆங்கது தான் கேட்(டு) - சீர்மோனையை எடுத்தெழுதுக.

A) ஆதிரை — ஆங்கது

B) ஆதிரை — நல்லாள்

C) நல்லாள் — தான் கேட்டு

D) ஆதிரை — தான் கேட்டு.

200. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும் - இயைபுத் தொடையினைச் சுட்டுக.

A) சினமென்னும் — சேர்ந்தாரைக்

B) சினமென்னும் — கொல்லி

C) சினமென்னும் — இனமென்னும்

D) சேர்ந்தாரைக் — கொல்லி.

www.kalvinews.com



( SPACE FOR ROUGH WORK )

www.kalvinews.com



( SPACE FOR ROUGH WORK )

www.kalvinews.com

www.kalvinews.com

Gr IV PH

**SAMU**

வினாத்தாள் வரிசை **A**

பதிவு எண்

# 2011

# பொது அறிவும் பொதுத் தமிழும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. வினாத் தொகுப்பு [A], [B], [C] அல்லது [D] என நான்கு வரிசைகளில் அச்சிடப்பட்டுள்ளது. (இந்தப் பக்கத்தின் இடது மேல் மூலையில் உள்ள கட்டத்தைப் பார்க்கவும்) விண்ணப்பதாரர் வினாத்தாள் வரிசையை விடைத்தாளில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் குறித்துக் காண்பிக்க வேண்டும். *உதாரணமாக ஒரு விண்ணப்பதாரர்* [A] என்னும் வினாத் தொகுப்பு பெற்றிருந்தால் அவர் அதை தன்னுடைய விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் கீழே காண்பித்துள்ளவாறு நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும்.

   [A] ■ [B] [C] [D]

5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
6. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் முதல் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர் மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீங்கள் எழுத வேண்டும்:- தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
9. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் [A], [B], [C] மற்றும் [D] என நான்கு விடைக்கட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடைக்கட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் (B) என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   [A] ■ [C] [D]

10. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
11. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
12. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
13. 1 முதல் 100 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
14. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

**ENGLISH VERSION OF INSTRUCTIONS IS PROVIDED ON THE BACK COVER OF THIS BOOKLET**

Tear here

வினாத் தொகுப்பின் இம்மேலுறையை கண்காணிப்பாளர் கூறும் வரையில் கிழிக்கக் கூடாது

DO NOT TEAR THIS COVER OF THE QUESTION BOOKLET UNTIL YOU ARE ASKED TO DO SO

இங்கே கிழிக்கவும்